## ஞாலகுருவின் படைப்புக்கள்

# திருந்தாதவர்களும் திருத்தம் பெறுவதற்காகத் தேவதேவியின் பரிந்துரை



பதினெண்சித்தர்
பீடாதிபதி என்பவர்கள்
தம்மிடம் வருபவர்களையெல்லாம்
அவரவரின் தரத்திற்கும், திரத்திற்கும்,
திறத்திற்கும், நம்பிக்கைக்கும்,
பயிற்சிக்கும், முயற்சிக்கும் ஏற்ப
அருட்பயிரினங்களாக, நடமாடும்
கடவுள்களாக, அருள் ஊற்றுக்களாக
மாற்றியே செயல்படுபவர்கள்
ஆவார்கள்.


இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானுச்சாரியார்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,122 ஐப்பசி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **“திருந்தாதவர்களும் திருத்தம் பெறுவதற்காகத் தேவதேவியின் பரிந்துரை”** - 2/12/1987இல் அனைத்து அடியான்களுக்காகக் குருதேவர் அவர்கள் எழுதிய சிறு கட்டுரை.
2. **“பூசையில் கொடுக்கப்படும் பலி, படையல் பற்றி”** - அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகன் அவர்கள் வழியாக அனைவருக்கும் 29/9/1987இல் குருதேவர் விடுத்த பலி கொடுப்பது பற்றிய விளக்கக் குறிப்போலை.
3. **“செயல்நிலை விளக்கத் திருவோலை”** - 11/10/1987இல் மதுரைச் சித்தரடியான் திரு N.S.சுவாமிநாதனுக்கு குருதேவர் அவர்கள் விடுத்த திருவோலை.
4. **“தருகுல வார பூசையின் மண்டலப் பூசைப் பாராட்டுத் திருவோலை”** - சேலம் மாவட்ட வேம்படிதாளத்தில் அமைந்துள்ள தருகுலத்தார்கள் அனைவருக்கும் சித்தரடியான் திரு சீ.மணி அவர்கள் மூலம் 26/11/1987இல் குருதேவர் விடுத்திட்ட விளக்க அஞ்சல்.
5. **“சேலம் மாவட்டத்தார்க்குச் செயல்விளக்கத் திருவோலை; தருகுல ஓராண்டு நிறைவு விழாப் பரிந்துரைகள்”** - என்ற இரு தலைப்புக்களில் 4/12/1987இல் குருதேவர் அவர்கள் சேலம் வேம்படிதாளத்தில் அமைந்துள்ள தருகுலத்தார்களுக்காக விடுத்த அஞ்சல் வடிவக் கட்டுரை.
6. **“குருபாரம்பரிய மாணுக்க இலக்கண விதிகள்”** - குருதேவர் அவர்கள் 12-11-1987இல் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்களுக்கு விடுத்த அஞ்சலில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதி.
7. **“குருபாரம்பரிய வாசகம்”** - 22-12-1987இல் குருதேவர் அவர்கள் தமது முழுநேர ஊழியருக்கு எழுதிய அஞ்சலில் இருந்த குருபாரம்பரிய வாசகம்.

தலைமைப்பீடம்,
2/12/87.

# திருந்தாதவர்களும் திருத்தம் பெறுவதற்காகத் தேவதேவியின் பரிந்துரை

1) அருட்படை வீரர்களுக்கிடையே அங்காடிக் காரர்களின் அவல நிலையா?

2) விடுதலைப் படையினரிடையே விதண்டாவாதக் காரர்களின் நிலையா?

3) அருளுலக அருட்பெருஞ்சுடர்களைப் போட்டி, பொறாமை, பேராசைகள் எனும் விட்டில் பூச்சிகளா அணைக்கப் போகின்றன?

4) மண்ணையும், விண்ணையும் இணைக்கும் மாவீரர் கூட்டம் கண்ணுமூச்சி விளையாட்டில் காலங் கடத்திடுமா?

5) விண்ணுயர் கண்கவர் கோபுரங்களைக் கட்டிய ஆன்மீக வாரிசுகளா நாத்திகத்தால் வீணுக்கப் பட்டிடுவர்?

6) கட்டுப்பாட்டுடன் திட்டமிட்டுச் செயல்படக் கற்றவர்களா காக்காய்க் கூட்டமாய்ச் சிதறிக் கத்திக் கொண்டிருப்பது?

7) தாயகத்தாரின் ஒற்றுமையின்மையே வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் வழங்கியது என்பதை உணர்ந்தவர்களுக்கு இடையேயே ஒற்றுமை உருவாகாதா?

**8) தாயகத்துப் பெரும்பான்மையினர் அன்னியருக்கு வேலியாய் கூலியாய் வாழ்வதை மாற்றிடப் புறப்பட்டிருக்கும் தன்மானத்தாரிடையேயும் போலி வாழ்வா?**

**9) ஒருவருக்கொருவர் உதவாமையாலேயே .... அன்னியர்களின் ஊடுருவல்கள் நிகழ்ந்தன என்பது உணர்ந்தவர்களும் கூட திருந்த மாட்டார்களா? திருத்தப்பட முடியாதவர்களா?**

**10) உலகாண்ட தமிழினம் ஒற்றுமை இல்லாததால்தான் வேற்றூர்களின் வேட்டைப் பொருளாயிற்று என்பதை உணர்ந்தவர்களுக்கு இடையில் கூடவா ஒற்றுமை உருவாகவில்லை?**

**11) கூடிவாழத் தெரியாததால்தான் தமிழர்கள் எங்கும் எதிலும் அடிமைகளாக வாழ நேரிட்டது என்பதை உணர்ந்தவர்களுக்கும் கூடவா கூடிவாழத் தெரியவில்லை?**

**12) தன்னினத் தலைமையை ஏற்றுப் போற்றிச் செயல்படாததால்தான் தமிழர்கள் தரைமட்டம் ஆனார்கள் என்பதை உணர்ந்தவர்களுக்கு இடையிலும் தன்னினத் தலைமையை ஏற்றுப் போற்றிடத் தெரியாத நிலைமையா?**

எனப்படும் இப் பன்னிரண்டு அறிவு விஞக்கள்?!; அருளுரை விஞக்கள்?! ... அருளாட்சிக்காக விண்வெளியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களும், அவரது தேவியாரும் மண்ணுலகுக்கு அனுப்பிய சத்தி அண்டத்துத் தேவதேவியால் எழுப்பப்பட்டிருக்கின்றன. அண்மையில் மதுரை மாவட்டத்தில் மறைந்திட்ட பெரியவர் Dr S.R. நீலமேகம் பிள்ளை அவர்களின் இறுதிச் சடங்குகளிலும்; தென்மண்டலப் பூசைகள் சிலவற்றிலும் நிகழ்ந்துள்ள எதிர்பாராத சரிவுகளும்; பரவலாக அருட்கோட்டங்களிலும்,

இ.ம.இ. - அ.வி.தி. செயல்வீரர்களுக்கு இடையிலும் ஏற்பட்டுள்ள தளர்ச்சி, அயர்ச்சி, தேக்கம், தடுமாற்றம், ... முதலியவைகளும்; சேலம் மாவட்டத்து நிகழ்ச்சிகளிலும், தருகுல வாரப் பூசையிலும், மண்டலப் பூசை நிறைவு விழாவிலும் (26.11.87); கோவை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, முத்துராமலிங்கம், காமராசர், இராமநாதபுரம் ... முதலிய மாவட்டங்களில் நமது அனைத்து வகையான வளர்ச்சிகளிலும் முடக்கங்கள், வீக்கங்கள், நலிவுமெலிவுகள் ஏற்பட்டிருப்பதும் பற்றித் தேவதேவி சிந்தித்தெடுத்த முடிவுப் பரிந்துரையே இங்கு தரப்படுகிறது. யாரும், எக்காரணம் பற்றியும் தங்களையே இந்த அஞ்சல் பெரிதும் கண்டிப்பதாக எண்ணி வருத்தப்படத் தேவையில்லை. ஏனெனில், இவ்வஞ்சல் திருக்குறள் போல மானுட இயல்புகளின் பாதிப்புக்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகக் கண்டிக்கின்றது. இதனால் இந்த அஞ்சலின் குற்றச்சாட்டுகளுக்குள் ஏறத்தாழ எல்லோருமே அடங்குகின்றனர்கள்.

2) நம்மவர்களுக்கிடையில் அரசியல்வாதிகளுக்கிடையிலே இருப்பதுபோல் தானென்ற வீம்பு, அகம்பாவம், ஆணவம், வம்பு, வீணான போட்டி பொறாமைகள், கௌரவப் பிறச்சினைகள், ... முதலியவை ஏராளமாக முட்புதர்கள் போல் வளர்ந்து கொண்டே யிருக்கின்றன. இவற்றை அகற்றும் பணியிலேயே நமது பெரும்பாலான காலமும், கருத்தும், முயற்சியும், உழைப்பும் வீணாகிடுமோ என்று பெரிதும் கவலைப்படுகிறோம் யாம். புரிந்தால் புரிந்து அவரவராகத் திருந்தவும், அருகிலுள்ளவர்களைத் திருத்தவும் முற்படுங்கள்.

3) எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும் சாதிமதச் சண்டைகளைப் போல்; வட்டார வெறிகளைப் போல்; தனிமனிதக் கோபதாபச் சண்டைச் சச்சரவுகள் போல்; பொருளுலக வெறியர்களுக்கிடையே நடக்கும் நெறியற்ற போராட்டங்கள் போல்; ... அருளாளர்களாகிய நம்மவர்களுக்கிடையிலும் போட்டி பொறாமைப் போர்களும், சண்டைச்

சச்சரவுகளும், கூட்டுச் சேராமையும், ஒன்றுகூடி ஒருமைப்பாட்டுடன் செயல்படாமையும், தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்தே வேற்றுமைகளை வளர்ப்பதும், ஒருவரை ஒருவர் மதியாமையும் கொடிய தொத்து நோய்கள் போல் தொடர்ந்து பரவியே வருகின்றன. இதனை உடனடியாக நம்மில் ஒவ்வொருவரும் உணர்ந்து திருந்தியும், திருத்தியும் செயல்பட்டேயாக வேண்டும். இல்லாவிட்டால் புரையோடிப் போன புண்ணுக்காக அறுவை மருத்துவம் செய்யப்படுவது போல் ஆங்காங்கே கடுமையான நடவடிக்கைகள் எடுக்க நேரிடும். அதற்காகப் பிறகு யாரும் வருந்தக் கூடாது. இது அன்பு அறிவிப்பு வேண்டுகோள்.

4) நம்மில் குருகுலக் காப்பாளர் பரமாச்சாரியார் நெ.சேவுகனும், தருகுலக் காப்பாளர் கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணியும், யக்ஞசாலைக் காப்பாளர் திரு பழ.கோபாலும், அகத்தியர் அருட்கோட்டக் காப்பாளர் இராமானுசதாசுவும், தென்மண்டல இ.ம.இ. தலைவர் பிறமயோகி M.S.R. மாரியப்பனும், தென்மண்டல அ.வி.தி. தலைவர் ச.துரை அவர்களும், அன்னபூரணி சித்திப் பூசைப் பொறுப்பாளர் வெ.செகதீசனும், ... ஏறத்தாழ தங்களோடு பிறர் ஒத்துழைப்பதில்லை என்ற வருத்தத்திலும், ஏக்கத்திலும்தான் துன்பப்படுகிறார்கள். இவர்கள், மேலும் மேலும் துன்பப்படும் வண்ணம்தான் இவர்கள் எதிர்பார்க்கிற உதவிகளோ, ஒத்துழைப்புக்களோ பிறரிடமிருந்து கிடைக்காத நிலை எதிர்பாராத காரணங்களால் ஏற்படுகின்றன. எனவே, நம்மவர்கள் மீண்டும் மீண்டும் தங்களுடைய மனநிலை, சிந்தைநிலை, செயல்நிலை, ... முதலியவைகளைத் தாங்களே ஆராய்ந்து உரிய திருத்தங்களைப் பெரிய அளவில் செய்துகொள்ளுமாறு பரிந்துரை வழங்கப்படுகின்றது. இதுவே தேவதேவியின் இந்தப் பரிந்துரை அஞ்சலின் உயிர்நாடியான கருத்தாகும்.

5) அன்புகூர்ந்து எதிர்பாராமல் பல்வேறு காரணங்களால் அல்லது தவிர்க்க முடியாமல் நம்மிடையே பல தனிமனிதர்களுக்கு இடையிலே

முளைத்து விட்ட வெறுப்புக்களையும், மறுப்புக்களையும், எதிர்ப்புக்களையும், பற்றின்மைகளையும், பழிக்குப் பழி வாங்கும் உணர்வுகளையும், ... வேருடன் களைந்து எடுத்திடும் பணியில் அனைவரும் ஈடுபட்டிடல் வேண்டும்! ஈடுபட்டிடல் வேண்டும்!! ஈடுபட்டிடல் வேண்டும்!!! ஈடுபட்டேயாக வேண்டும்!!!! நாம் கூடி வாழ்ந்தால்தான் கோடி நன்மை விளைவிக்க முடியும். நமக்குள் ஆழமான, அழுத்தமான பற்றும் பாசமும், நட்பும் தோழமையும், ஒற்றுமையும் ஒருமைப்பாடும் நன்கு செழித்திட்டால்தான் பன்னெடுங்காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் நம்மவர்களின் அனைத்துவிதமான பழிநிலைகளுக்கும், அழிநிலைகளுக்கும், இழிநிலைகளுக்கும், ஒழிநிலைகளுக்கும், கழிநிலைகளுக்கும் முடிவுகட்ட முடியும், முடிவுகட்ட முடியும், முடிவுகட்ட முடியும். எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!! அதாவது சாதியோ, மதமோ, அரசியலோ நம்மை பிளவுபடுத்தி விடக்கூடாது. பிரித்து விடக்கூடாது. திருந்துங்கள்! திருந்துங்கள்!! திருந்துங்கள்!!!

**அன்பு**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**
**2/12/87.**

கட்டாயமாக உடனே இரண்டு பேறுநகல்கள் அனுப்பிய பிறகே கார்பன் நகல்கள் அனுப்ப வேண்டும். - **குருவாணை.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இறுதியில் கையெழுத்தும் அடிக்குறிப்பும் குருதேவர் அவர்களின் கையெழுத்தில் இருந்தன.//**

# பூசையில் கொடுக்கப்படும் பலி, படையல் பற்றி

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் பரமாச்சாரியார் அவர்களின் 24.9.87 தேதியிட்ட ஐயவிஞ அஞ்சலுக்குப் பதில்:-

1) **பூசையில் கொடுக்கப்படும் பலி, படையல் பற்றிய கருத்து விளக்கம்:**

2) நாம் நமது வளர்ச்சிக்கேற்பத் தேவையில்லாத எதிர்ப்புக்களையும், கருத்துப் போராட்டங்களையும் தவிர்த்துக் கொள்வது நல்லது. ஆனால், அடிப்படைக் கொள்கையையோ, குறிக்கோளையோ மாற்றிக் கொள்ளத் தேவையில்லை. உலகியலுக்கேற்பவும், சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கேற்பவும் நமது கொள்கையையும், குறிக்கோளையும் பிறர் மனம் புண்படாமல் பரப்ப வேண்டும் என்பதுதான் நமது நோக்கம்.

3) பொது இடமான அ.வி.தி. மையங்கள், குருகுலம், ... ஆகியவற்றில் வழக்கம் போலவே பலிகள் கொடுத்திடலாம்.

**<u>குறிப்பு:-</u>**

i. கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் போன்ற நமது சொந்த இடங்களிலும், அடியான்களுக்கும், இயக்கத்திற்கும் சொந்தமான இடங்களிலும் எத்தனை பலிகள் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் தரலாம்.

ii. மற்ற புதிய அல்லது பொது இடங்களில் நமது பூசைகளைச் செய்யும் போது பிறர் நம்மை எதிர்ப்பதற்கு பலியை ஒரு காரணமாக ஆக்கிடக் கூடாது. மேலும், திடீரென்று புதிய இடங்களிலும், பொது இடங்களிலும் பலியைக் கொடுக்கும்போது அச்சமோ, கூச்சமோ,

அதிர்ச்சியோ, வெறுப்போ ஏற்பட்டு விடாதபடி தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக பூசைக்குரியவர்களும், நமது இயக்கத்தவர்களும் மட்டுமே பூசையின் ஆரம்பத்தில் கூடியிருக்குமாறு செய்து பலியைக் கொடுத்துப் படையல் பொருளை சமைக்க அனுப்பி விடலாம். (அதாவது, அறுத்த கோழி, சேவல், புரு, ... போன்றவைகளை). பிறகு யாகத்தில் கட்டாயமாகப் பொங்கலும், சுண்டலும் செய்து அவற்றை எரிகின்ற யாகத் தீயில் அவிர்ப்பலியாகப் போடுகிறோம். அப்பொழுது பலி கொடுத்த சமைத்த இறைச்சியையும் அவிர்ப்பலியாகப் போட்டுவிடலாம்.

iii. யாக முடிவில் பொங்கலையும், சுண்டலையும் எல்லோருக்கும் படையல் பொருளாக வழங்கி விடலாம். யாகத்தில் பலி கொடுத்துச் சமைத்த இறைச்சியினை நம்மவர்களும், இறைச்சியுணவில் விருப்பம் உடையவர்களும் மட்டும் சாப்பிடலாம்.

4) அருட்கோட்டப் பூசையில் வழக்கம் போலவே பலி கொடுத்துப் பூசை செய்யலாம்.

5) பருவ பூசை நம்முடைய இடங்களில்தான் நடக்கின்றன என்பதால் வழக்கம் போலவே பலி கொடுக்கலாம்.

6) வீரமாகாளி சன்னிதானம் நமது இடம். எனவே, பகலில் வழக்கம் போலவே பலி கொடுக்கலாம்.

7) புது இடங்களில், தனியார் இல்லங்களில் கொடியேற்றுவது என்றால் கொடிக்கு அவசியம் இரத்தப் பொட்டு வைத்தே ஏற்ற வேண்டும். இருப்பினும் அந்த ஊரில், வட்டாரத்தில் நமக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதையும், பலி கொடுத்துப் பூசை செய்தலுக்கு வரவேற்பிருக்கிறதா, எதிர்ப்பிருக்கிறதா என்பதையும் தாங்கள் மற்றவர்களோடு கலந்தாலோசித்து முடிவு செய்து கொள்ளுங்கள். அந்த வட்டாரத்தில் பலிக்கு எதிர்ப்பு இருக்காது

என்றால் வெளிப்படையாக கொடிமரத்தருகில் பலியிட்டு இரத்தப் பொட்டு வைத்துக் கொடியேற்றவும். எதிர்ப்பு உள்ள இடம் என்றால், இல்லத்தினுள் யாகம் செய்து பலி கொடுத்து தகட்டினை இரத்தத்தில் முழுக்காட்டி, கொடிக்கும் இரத்தப் பொட்டு வைத்து, வெளியில் கொண்டு வந்து கொடிமரத்தடியில் தகட்டினைப் புதைத்துக் கொடியேற்றிடலாம். எனவே, இடம் பார்த்துச் சூழ்நிலைகளை ஆராய்ந்து தக்க முறையில் செயல்படவும்.

8) <u>கட்டாயமாக எந்தப் பூசையாக இருந்தாலும் இ.ம.இ. கொள்கை விளக்கம் படிக்கப் பட்டேயாக வேண்டும் என்ற விதியை மறந்து விடாதீர்கள்</u>.

9) ஆரம்பம் முதல் இன்று வரையுள்ள குருதேவர் அறிக்கைகள் நம்மவர்கள் அனைவரிடமும் இருக்க வேண்டும். இல்லாதவர்களை கட்டாயப்படுத்தி வாங்கிடக் கூறுங்கள்.

... ... ... ... ...

அன்பு

**குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்,**

29/9/87.

**//உண்மை நகல்//**

நகல்: சித்தரடியார் சீ.மணி, 1/10/87.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# செயல்நிலை விளக்கத் திருவோலை

11/10/87,
தலைமைப்பீடம்.

அருள்மிகு மூலக்கரை சுடலைபத்திற காளி சன்னிதானம் திரு N.S. சுவாமிநாதன் அவர்கள் சமூகத்திற்கு,

தலைவர், குருதேவர், அருளாட்சி நாயகம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுக்கும் **செயல்நிலை விளக்கத் திருவோலை**.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல். அம்மையப்பன் திருவருள். அருளுலகத்தார் எடுக்கும் முடிவே. உலகியல்படி குருதேவர் நிகழ்த்துகின்ற ஆய்வுகளின் பரிந்துரையே. இவற்றைப் புரிந்து நமது இயக்கத்தவர்கள் தலைமைப்பீடத்திலிருந்து அனுப்பப் படக்கூடிய அனைத்து வகையான முடிவுகளையும் எவ்விதத் தயக்கமோ, மயக்கமோ இன்றி முழுமையாக ஏற்றுச் செயல்படுத்த வேண்டும்.

2) அண்மையில், சேலம் மாவட்ட அ.வி.தி.யினர்களுக்குக் கடுமையான செயல்நிலை விளக்கங்களும், விமரிசனங்களும் வழங்கப் பட்டுள்ளன. விரைவில் நகல்கள் அங்கு வரும். அதன்படி படிப்பறிவில்லாத அல்லது படிப்பில் ஆர்வமில்லாத நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் அருளூறு சக்கரங்கள் இணைக்கப்பட்ட தாத்தாவின் புகைப்படங்களையும், குருதேவரின் புகைப்படங்களையும் (B&W = ரூபாய் 7/-; Color = ரூபாய் 11¼/-) வழங்க வேண்டும். ஆனால்,

கட்டாயமாகக் காயந்திரி மந்தரம் உள்ள சிறிய புத்தகத்தை வழங்க வேண்டும். ஓரளவாவது படிப்பறிவுள்ளவர்கள், அல்லது அருள்நலம் விளைவிப்பது சிக்கலானது, சிரமமானது என்று கருதப்படக் கூடியவர்களுக்கு ரூபாய் 10/- புத்தகமான பூசைமொழிப் புத்தகத்தையாவது கட்டாயமாக வழங்க வேண்டும். அதை முழுக்க அன்றாடம் ஒருமுறை பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் நெல், மஞ்சள், பூ ஆகிய மூன்றையும் விளக்கருகில் தண்ணீர் தெளித்து குவித்து வைத்து அதன்மேல் சிறிய காமாட்சியம்மன் விளக்கை வைத்து (சிறிய குத்துவிளக்கு அல்லது மண் விளக்கு) இந்தப் புத்தகத்தைப் படித்தேயாக வேண்டும் என்ற நியதியை அறிவித்தேயாக வேண்டும். அப்படிக் குறைந்தது ஒரு மண்டல காலமாவது படித்தால்தான் நலம் விளைய ஆரம்பிக்கும். இப்படிக் குறைந்தது 3 (மூன்று) மண்டலங்களாவது ஓதிய பின்தான் கணிசமான அளவு நன்மை கிடைத்திடும். அதற்குப் பிறகு முழுமையான நலம் விளைந்திடும் வரை இவர்கள் இதுபோல் பூசாமொழி வாசகத்தை ஓதி வர வேண்டும். வாழ்நாள் முழுதும் ஓதி வந்தால் நல்லது.

**குறிப்பு:-** பாதிக்கப்பட்டவர்கள் பொருளாதாரத்திலும், உறவு முறையிலும், உரிமை முறைகளிலும் உலகியலாகப் பாதிக்கப் பட்டிருந்தால் (அதாவது பொருளாதார வகையில் பாதிக்கப் பட்டிருந்தால்) இவர்கள் கட்டாயமாக இ.ம.இ. கொள்கை விளக்கப் புத்தகத்தை வாங்கி இந்தத் திருவிளக்கின் முன் மூன்று நாட்களுக்குள் ஒருமுறை படித்து முடித்திட வேண்டும். வீட்டில் வசதியில்லாதவர்கள் உள்ளூரிலுள்ள எந்தச் சிறிய கோயிலானாலும் அங்குச் சென்று அன்றாடம் பூசாமொழி வாசகங்களைப் படித்தாக வேண்டும். தொடர்ந்து 3 நாட்களுக்குள் ஒருமுறை கொள்கை விளக்கம் படித்தாக வேண்டும்.

3) நமது நூல்கள் அச்சிடவும், கருகுலப் பூசைகளைத் தொடர்ந்து செய்துவரவும், தலைமைப்பீட அலுவலக நிருவாகங்களையும் பூசைகளையும்

தொடர்ந்து செய்துவரவும் நமக்குப் பொருளாதாரம் கிடையாது. எனவே, படிப்பறிவு உள்ளவர்கள் கிடைக்கும் போதெல்லாம் நான்கு ஆண்டுகளாக ஆயிரக்கணக்கில் அச்சடித்து வைத்திருக்கும் குருதேவர் அறிக்கைகளையும், மற்றப் புத்தகங்களையும் விலைக்கு விற்கப் பாருங்கள். இயக்க வளர்ச்சிக்கு நன்கொடையும், குருகாணிக்கையும் வாங்கி அனுப்பப் பாருங்கள். நம்மவர்களிடம் நலம் பெற்றுச் செல்லக் கூடியவர்களின் முகவரிகளை தொடர்ந்து முறைப்படி தெளிவாக எழுதிக் காத்திடுங்கள். நம்மிடம் நலம் பெற்றவர்களிடம் தேவையேற்படும் போது நாம் உரிமையோடு சென்று நம்முடைய நிகழ்ச்சிகளுக்கு நன்கொடை கேட்கக் கூடிய நல்ல உறவு முறைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அதாவது, கிறித்துவர் கோயிலில் உள்ள பாதிரியார்களுக்கும், கிறித்துவ மத மக்களுக்கும் எந்த அளவு நிலையான நல்ல தொடர்பு இருக்கிறதோ, அந்த அளவு நமது அ.வி.தி. செயல்வீரர்களுக்கும், இந்துமத மக்களுக்கும் நல்ல உறவுகள் இருக்க வேண்டும்.

**குறிப்பு:-** நம்முடைய அருட்கோட்டங்கள் இருக்கக்கூடிய வட்டாரங்களிலும், அ.வி.தி. செயல்வீரர்கள் செயல்பட்ட வட்டாரங்களிலும் நம்மால் நன்மையடைந்தவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். ஆனால், குருதேவரோ, அல்லது அருளாற்றல் மிக்க சன்னிதானங்களோ அருட்கோட்டத்திற்கோ, அந்த வட்டாரங்களுக்கோ சுற்றுப்பயணம் வந்தால் அந்த மக்கள் வந்து சந்திப்பதில்லை. **இன்னும் சொல்லப் போனால் நம்முடைய சன்னிதானங்களிலேயே பலர் வந்து சந்திப்பதில்லை**. ஏனெனில், குருதேவர் வந்தால்தான் வந்து பார்ப்பது என்ற வழக்கத்தை வைத்துக் கொண்டுள்ளார்கள். இவற்றிற்கெல்லாம் சிறப்பான காரணம், **நம்மவர்களுக்கிடையிலும் ஒற்றுமையில்லை, நம்மால் நலமடைந்தவர்களுக்கு இடையிலும் ஒற்றுமையில்லை. நம்மால் நலமடைந்தவர்களுக்கும், நமது அமைப்புக்களுக்கும், நமது இயக்கத்திற்கும் இடையில் நிலையான**

**<u>தொடர்பு இல்லை</u>**. எனவேதான், ஆண்டுகள் பலவாகியும் நாம் வலுவான கட்டமைப்புள்ள நல்ல மக்கள் இயக்கமாக வளர முடியவில்லை. இனிமேல் நம்மால் நலமடைந்தவர்களாக இருந்தாலும் சரி, பரிகாரம் முடிந்தால் கூடக் கட்டாயமாக வாரம் ஒருமுறை மீளுட்சியம்மன் ஆலய வழிபாட்டிலாவது கலந்து கொள்ள வேண்டும். (ஏனென்றால், சுடுகாட்டிற்கு வருவது என்றால் மக்கள் யோசிப்பார்கள், தயங்குகிறார்கள்). இந்தக் கட்டாய நியதியை ஏற்படுத்தினால்தான் இந்துமத மறுமலர்ச்சிக்காக மக்களை ஒன்று திரட்டிடும் மாபெரும் பணி நிறைவேறிடும்.

இந்த முறையைத் தமிழகம் முழுவதும் கட்டாயமாகச் செயல்படுத்தி, ஒவ்வொரு அருட்கோட்டத்திலும் நலம் பெறுவோர் பட்டியலில் தேதிப்படி முழுமையான முகவரியுடன் குறித்து வைத்திடல் வேண்டும். இவர்களுக்கு மாதம் ஒருமுறையாவது அஞ்சலனுப்பி அந்தந்த அருட்கோட்டத்திற்கு மாதப் பூசைக்காக ரூ. 1/- அனுப்பிடக் கூறிட வேண்டும். அப்போதுதான் அருட்கோட்டங்களின் பொருளாதார நிலை சரிப்பட்டிடும். மேலும், இவர்களை ஆரம்பத்திலேயே ஆண்டுச்சந்தா ரூ. 2/- பெற்று அ.வி.தி. உறுப்பினராகப் பதிவு செய்திடல் வேண்டும். இதேபோல், குறைந்தது ரூ. 60/- ஓராண்டுச் சந்தாவாகப் பெற்று அவர்களை இ.ம.இ. உறுப்பினர் ஆக்கிடல் வேண்டும். இந்த ஓராண்டுச் சந்தாவுக்குரிய பணத்தை அவர்களின் பரிகாரம் முடிவதற்குள் சிறுகச் சிறுகக் கூட வாங்கி விடலாம். இந்தச் செயல்திட்டம்தான் நமது இயக்கக் கட்டமைப்பையும், வலுவையும், வளத்தையும் வலிமைப்படுத்திடும். இவற்றைக் கட்டாயமாகச் செயலாக்குவதுதான் **குருதேவரின் ஆணை**, **தேவதேவியின் பரிந்துரை**.

4) அ.வி.தி. தலைமைச் செயலாளர் என்ற நிலையில் இருக்கக் கூடிய சேவுகன், இயக்கத்தின் தலைமைப் பொறுப்பாளர் சி.கவிக்குமார், தலைமைப்பீட அலுவலகப் பணியாளர் இளந்துறவி சுந்தரானந்தா,

குருதேவரின் அருகிலேயே இருக்கின்ற இரா.சீனிவாசன், கருகுல நிருவாக அதிகாரி மு.பெருமால், தருகுலத்தார்கள் சீ.மணி, வெங்கடேசன், இல.க.கணேசன், பத்தவச்சலம், தஞ்சை இராமர், பிறமயோகி M.S.R. மாரியப்பன், ... இப்படிக் குறிப்பிடத் தக்க முதல்நிலையில் இருக்கின்ற அனைவருக்குமே ஞானக்காட்சி காணும் ஆற்றல் வழங்கப்பட வில்லை. **இது ஏன் என்று இப்பொழுதாவது நம்மவர்களுக்கு விளக்கம் அளித்திட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை வந்திருக்கிறது. இனிமேலாவது ஞானக்காட்சி பெற வேண்டுமென்ற கட்டுக்கடங்காத பேராசை எல்லோருக்கும் வரக்கூடாது. இதேபோல், ஞானக்காட்சி காணுகின்றவர்களைப் பற்றி அளவுக்கதிகமாகவும், மிகப்பெரிய அரிய சித்தி அடைந்தவர்களாகவும் கருதும் மனப்பான்மை முழுமையாக அகன்றேயாக வேண்டும்.**

**விளக்கம்:-**

a) இன்று வரை யார் ஞானக்காட்சி பார்த்தாலும் அதைக் குருதேவர்தான் சரியா தவறு என்று கூற வேண்டிய நிலையிருக்கிறது. ஏறத்தாழ நூற்றுக்கு ஐம்பது பங்கு கற்பனைகளும், தவறுகளும்தான் இருக்கின்றன. இதற்குக் காரணம் **எந்த ஞானக்காட்சியாளனும் குருதேவரிடம் முழுமையாகப் பயிற்சி பெறுவதில்லை. 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்றுதான் செயல்பட்டு வருகிறார்கள். மேலும், இவர்கள் குருதேவரிடம் வந்து தங்கி இட்டு தொட்டு சுட்டி அருள் பெற்றுச் செல்வதில்லை. குருவாணைகளை மதித்து நடப்பதில்லை. இரகசியம் காப்பதில்லை.**

b) ஞானக்காட்சி பார்ப்பவர்கள் யாருமே தங்களுடைய ஞானக்காட்சிகளை உடனுக்குடன் எழுத்து மூலம் குருதேவரிடம் கேட்டு விளக்கங்களைக் கேட்பதில்லை. அதன்படிச் செயல்படுவதில்லை. மேலும், **குருவாணைப்படி குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே!; குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே!; ஞானக்காட்சி காண வேண்டும் என்பதை**

**மறந்து விடுகிருர்கள்**. அதாவது, அருட்கோட்டத்திலோ, அதாவது யாகம் செய்கின்ற இடத்திலோ முன்கூட்டியே ஒப்புதல் பெற்றுத்தான் ஞானக்காட்சி காண வேண்டும் என்பதை மறந்து விடுகிருர்கள். ஆனுல், பெரி.முத்தையா அவர்களே இதன்படிச் செயல்படாமல் போய்விட்டார் என்ற காரணத்தினுல்தான் அவர் காட்டாற்று வெள்ளமாகப் போய்விட்டார். அவர் எந்த மாவட்டத்திலும் நிலேயாகச் செயல்பட முடியாமல் போய்விட்டது. அவருடைய ஞானக்காட்சியால் குருதேவரின் அருட்கணிப்புக்கள் மக்களுக்குப் பயன்படும் நிலே வளராமல் போய்விட்டது. அவரும் சுமார் நூறு கண்டிப்பாணேகளே வாங்கி அலுத்துப் போய்விட்டார்; குருதேவரும் மிகவும் அலுத்துப் போய்விட்டார். எனவே, இப்பொழுது புதிதாகத் தயாராகுகின்ற ஞானக்காட்சி காணுபவர்களாவது கண்டிப்பாகக் குருவாணேயின்படித் தான் செயல்பட வேண்டும். இவர்களுக்குத் தரமும், திறமும் இருந்தால் எவ்விதத் தயக்கமும் இல்லாமல் குருதேவர் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் தருவார்.

c) மூலக்கரை அருட்கோட்டத்திற்கு ஞானக்காட்சி பார்க்க எப்படியாவது ஓர் ஆள் தேவை! தேவை! தேவை! என்று கணக்கற்ற முறை நேரிலும், அஞ்சலிலும் வேண்டிய பிறகுதான் மூலக்கரைக்காக திரு இலக்குமிபதி அவர்களே உண்டாக்கித் தந்திருக்கிருர் குருதேவர். எனவே, அவர் மூலக்கரைச் சுடலேயில் மட்டும்தான் ஞானக்காட்சி பார்க்கலாம். வேறெந்த நாளிலும் பார்க்கக் கூடாது. வேறு எந்த இடத்திலும் பார்க்கக் கூடாது. மூலக்கரை தவிர வேறெங்கு சென்று யாருக்கும் பார்ப்பது என்ருலும், அந்த வீட்டு மண், அந்த வீட்டுத் தலேவர் அல்லது யாராவது ஒருவருடைய பிறப்பியல் (சாதகம்), வீட்டிலுள்ளவர்களின் கைரேகைகள் முதலியவற்றுடன் அருட்கணிப்புக் காணிக்கை ரூ.48/-, குருதேவர் சந்தா ரூ.25/-, இ.ம.இ. ஆண்டுச் சந்தா ரூ.60/-, பூசாவிதி, இ.ம.இ. கொள்கை விளக்கம், இந்துமத விளக்கப் புத்தகங்களுக்காக ரூ.10

+ ரூ.15 + ரூ.5 = ரூ.30/-, அ.வி.தி. உறுப்பினர் ஆண்டுச் சந்தா ரூ.2 ஆக மொத்தம் 48 + 25 + 60 + 30 + 2 = ரூ.165/- அனுப்பி அருட்கணிப்பைப் பெற்ற பிறகுதான் அல்லது குருதேவரின் ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் ஞானக்காட்சி காணலாம். ஏனென்றால், அனாதி காலத்து பீடாதிபதியே இவருள் செயல்படுகிறார். எச்சரிக்கை. இதனால், கட்டாயமாகக் குருவின் பாதுகாப்பு இல்லாவிட்டால் மூளைப் பாதிப்பு, நரம்புத் தளர்ச்சி, குடும்பப் பாதிப்பு, பொருளாதாரப் பாதிப்பு, உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பாதிப்பு முதலிய பல பாதிப்புக்கள் வந்துவிடும். **கடுமையான எச்சரிக்கை**. உடனடியாக இதன்படிச் செயல்பட இலக்குமிபதி தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். திரு N.S. சுவாமிநாதன் இதன்படி இலக்குமிபதி செயல்படுகிறாரா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். திரு S.V. நம்மாழ்வார் இதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும். இல்லாவிட்டால், மேற்படி மூவருமே சற்றும் எதிர்பாராமல் பாதிப்புக்களைப் பெற்றிட நேரிடும். பிறகு குருதேவர் காப்பாற்றுவது என்பது முடியாததாகி விடும்.

d) குறிப்பாக <u>ஞானக்காட்சி காணுகின்றவர்கள் யாராக இருந்தாலும் குருவாணைப்படி செயல்படா விட்டால் விரைவில் கண்ணொளி இழப்பர்; அறிவு நிதானத்தை இழப்பர்; உடல் நலத்தை இழப்பர்; எச்சரிக்கை என்பதுதான் குருபாரம்பரிய வாக்கு</u>. அதாவது ஞானக்காட்சி என்பது இருபக்கமும் கூர் உள்ள கைப்பிடி யில்லாத கத்தி போன்றது. அதைக் கையாளுவது மிகமிகச் சிரமம். எனவேதான், எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

5) ... ... ... ... ... *{தனிப்பட்ட அடியானுக்கான கருத்து என்பதால் நீக்கப்பட்டுள்ளது.}*

**<u>குறிப்பு:-</u>**

முடிந்தால் முடிந்த வரை தத்தனேரி, மதிச்சியம், கடம்பவனம், குலசேகரநல்லூர் முதலிய இடங்களுக்குச் சென்று வருக.

இதில் கூறியுள்ளபடி அருள்நலம் வேண்டி வருபவர்களை முறையாகவும், முழுமையாகவும் பதிவு செய்யுங்கள். இயக்கத்தில் உறுப்பினராக்குங்கள்.

உங்களின் மூலம் பலருக்கும் குருதேவரின் அருட்கணிப்பைப் பெற்று அதன்வழியாக நலப்படுத்துங்கள்.

நம்முடைய அருட்கோட்டங்கள் அனைத்திலும் குருகுலம், தருகுலம், திருகுலம் உட்படப் பொறுப்பில் உள்ளவர்கள் அருள்நலம் வேண்டி வருபவர்களின் பெயர் முழுமுகவரிகளை கையெழுத்தோடு பேரேட்டில் (Register) பதிந்தாக வேண்டும். உடனடியாக ரூபாய் 2/- பெற்று அ.வி.தி. உறுப்பினராகக் கட்டாயமாகப் பதியவேண்டும். கட்டாயமாக ரூபாய் 2/- செலுத்தி காயந்திரி புத்தகத்தை வாங்கச் சொல்ல வேண்டும். இது அல்லாமல், வரவு செலவுக் கணக்கு தெளிவாக வாராவாரம் அனுப்பியேயாக வேண்டும். இதில் இயக்க நிகழ்ச்சிகளையும், மற்ற தனிமனிதர் தொடர்புடைய நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டாக வேண்டும். நாம் அருளாளர் இயக்கம் என்பதால் பிறரைப் பற்றிய விமரிசனம் தவறல்ல. அதுதான் நம்மை வளர்க்கும். அடியான்களுக்கு இடையில் போட்டி பொறுமை வளராமல் இருக்க வேண்டுமென்றால் இந்தச் சுய விமரிசன நிலை கட்டாயம் இருக்க வேண்டும். ஆனால், குருதேவருக்கு எழுதுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இதேபோல், **அருட்கோட்டப் பொறுப்பாளர்கள் முதல் அனைத்து வகையான அடியான், அடியாள், அடியார்கள் வரை இயக்கத் தொடர்பான அனுபவங்களையும், செலவினங்களையும் கட்டாயமாகக் குறிப்பேட்டில் diary போல் குறித்து வைத்தேயாக வேண்டும்.**

**<u>சிறப்புக் குறிப்பு:-</u>** யார் குருதேவரைத் தலைமைப்பீடத்திற்குப் பார்க்க வந்தாலும் சரி, சுற்றுப்பயணத்தில் பார்க்க வந்தாலும் சரி முதலில் அவர்களின் குறிப்பேடுகளை குருதேவரிடம் கொடுக்க வேண்டும். குருதேவர் அவற்றைப் படித்துப் பார்த்துக் கையொப்பம்

இட்டபின்தான் அவர்களைப் பார்ப்பார். குறிப்பேடு இல்லாத யாரையும் குருதேவர் பார்க்க மாட்டார். இது கண்டிப்பான **குருவாணை**. இந்த குருதேவரின் 52வது பிறந்த நாள் குருவாணை இது. இன்று 11.10.87 முதல் இது செயலுக்கு வருகிறது. **எச்சரிக்கை**. இந்த விதி யாருக்கும் தளர்த்தப்பட மாட்டாது. குறிப்பேடில்லாமல் வருபவர் கூட்டத்தில் ஒருவராகத்தான் நிற்க வேண்டும். அவர்களுக்கு எந்த விதமான மதிப்பும் தரப்பட மாட்டாது. இதுவே **அருளாட்சி அமைப்புப் பணிச் செயல்வீரர் பயிற்சிக் கட்டுப்பாட்டு முதல்நிலை**. இது தேவதேவியின் பரிந்துரையோடு குருவாணையாக வழங்கப் படுகிறது.

6) இந் நெடிய அஞ்சலுக்கு இதைப் படிப்பவர்கள் எல்லாம் குருதேவருக்கு 2 பேனா நகல்களும், 4 கார்பன் நகல்களும் கட்டாயமாக அனுப்ப வேண்டும். இதை எழுதும் போதுதான் கருத்துக்கள் பதியும். எனவே, இதன்படிக் கட்டாயமாகச் செயல்பட வேண்டும். மற்றவை நேரில்.

அன்பு

**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**
11/10/87.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது. இறுதியில் குருதேவர் கையொப்பம் இருந்தது.//**

# <u>தருகுல வார பூசையின் மண்டலப் பூசைப் பாராட்டுத் திருவோலை</u>

தலைமைப்பீடம்,
26/11/87.

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம் தவத்திரு சித்தரடியார் சீ.மணி அவர்கள் சமூகத்திற்கு தலைமைப் பணியாளர்களுள் ஒருவர், பச்சைமலை வீரப்பட பத்திறகாளி சன்னிதானம் சித்தரடியார் இரா.சீனிவாசன் குருவாணை பெற்று வரையும் <u>தருகுல வாரபூசையின் மண்டலப்பூசைப் பாராட்டுத் திருவோலை</u>.

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அம்மையப்பன் திருவருளே.

2) அன்பு நண்ப! நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடிகளார்கள், சித்தியாளர்கள், சித்து விளையாடல்காரர்கள், ... தாங்கள் மட்டுமே அருட்கணிப்புக் கூறியும், அருள்வாக்கு வழங்கியும், அற்புதங்கள் நிகழ்த்தியும் அருட்பணியாற்றி தங்களால் முயன்றவரை அருளுலகில் ஒரு நினைவுச் சின்னமாக, சாலையோரத்து எல்லைக்கல்லாக (Mile-stone) குறிப்பிட்ட மக்களுக்கு மட்டும் குலதெய்வமாக வாழ்ந்தே; மறைந்து சென்றிருக்கிறுர்கள். அவர்களுக்கேற்பட்ட சோதனைகளும், வேதனைகளும், அவர்களுடைய சாதனைகளும், அவர்களுடைய போதனைகளும் மதத்துறையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மறுமலர்ச்சிப் பணிகளை உருவாக்கி இருக்கின்றன. அவையெல்லாம் அவர்கள் மறைந்த குறிப்பிட்ட கால எல்லைக்குள் காற்றில் கரைந்த கற்பூரமாய்,

மண்ணில் மறைந்த மலர் மணமாய், தேய்ந்த பழங்கயிருய் மாறியதைத்தான் உலக வரலாறும், இலக்கியங்களும் விளக்குகின்றன.

ஆனால், பதினெண்சித்தர் பீடாதிபதி என்பவர்கள் தம்மிடம் வருபவர்களை யெல்லாம் அவரவரின் தரத்திற்கும், திரத்திற்கும், திறத்திற்கும், நம்பிக்கைக்கும், பயிற்சிக்கும், முயற்சிக்கும் ஏற்ப அருட்பயிரினங்களாக, நடமாடும் கடவுள்களாக, அருள் ஊற்றுக்களாக மாற்றியே செயல்படுபவர்கள் ஆவார்கள்.

மேலும், இப் **பதினெண்சித்தர் பீடாதிபதிகள் கல்லையும், புல்லையும் கூடக் கடவுளாக்கும் வல்லமை பெற்றவர்கள்** என்பதால்; ஏற்கனவே உள்ள எல்லாவகையான வழிபாட்டு நிலையங்களையும், வழிபாட்டுக்குரிய பெரியவர்களையும், மத முதன்மைக்குரிய அனைத்தையும் புத்துயிர்ப்புச் செய்து, அருளூற்றுக்களாக மாற்றுகிறார்கள். அதாவது, மற்றவர்கள் தங்களுடைய அருளை மட்டுமே வழங்க வல்லவர்கள் என்றபோது, பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மேலே குறிப்பிட்டது போன்று பிறருக்கு அருளை வழங்கக் கூடிய ஆற்றல் மிக்கவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

அதிலும், இன்றுள்ள குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, பராசத்தித் திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் தன்னை நம்பி வரக்கூடிய அனைவரையுமே எந்தவிதமான வேறுபாடு இல்லாமல், எந்தவிதச் சார்பும் காட்டாமல் எல்லோரையுமே இட்டும் தொட்டும் சுட்டியுமே அருளாளர்களாக உருவாக்கித்தான் வருகிறார்**.

ஆனால், அவர் வழங்கும் ஆற்றலை வாங்குகின்றவர்களின் தாங்கும் ஆற்றலுக்கும், ஏற்றுப் போற்றிச் செரிமானம் செய்து கொள்கின்ற அளவுக்குத்தான் 48 வகையான அருட்பட்டத்தவர்களும்,

48 வகையான அருளாளர்களும், 48 வகையான பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்களும் உருவாகி இருக்கிருர்கள், உருவாகிக் கொண்டு இருக்கிருர்கள், உருவாகப் போகிருர்கள்.

3) எனவே, வற்ருத பனிமலேச் சாரல் அருவியாக அருளே வழங்கும் நம் குருதேவரை நெருங்குபவர்கள் அந்த அருவியின் எழிலிலும், பொழிலிலும், பயனிலும் தங்களே மறந்து ஈடுபடுபவர்களாக மாறலாம்; எவ்வளவு காலம் வேண்டுமாளுலும் அருவியில் நீராடலாம்; தாங்கள் கொண்டு வந்திருக்கும் பாத்திரங்களின் அளவிற்கேற்பக் கொஞ்சமாகவோ, நிறையவோ அருவி நீரை எடுத்துச் செல்லலாம். எனவே, இந்தப் பனிமலேச் சாரல் அருவியாக வற்ருது அருள்வழங்கும் பதினெண்சித்தர் பீடாதிபதியால் எல்லோருக்குமே நன்மையுண்டு. ஆளுல், யாராலும் அவருக்கு ஆகப் போவது ஏதுமில்லே. அதாவது, **‘பொன்ளுல் (தங்கம்) பொன்படைத்தார்க்குப் பயனுண்டு. ஆளுல் பொன்படைத்தாரால் பொன்னுக்குப் பயன் என்ன?’** என்ற குருபாரம்பரிய வாசகத்திற்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் வாழ்பவர்தான் நமது தேவகுரு.

எனவே, நாமெல்லாம் நமது காலத்தில் குருதேவரை மிகுந்த அளவு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நம்மில் யாரும் பைத்தியக் காரத்தனமாகத் தாங்கள் குருதேவருக்கு உதவுவதாக எண்ணி விடக் கூடாது. அதாவது கோபுரத்தில் உள்ள பதுமை தாங்கள்தான் கோபுரத்தையே தாங்குவதாக எண்ணுவது போல் நம்மவர்கள் யாரும் எண்ணிச் செயல்பட்டு விடக்கூடாது. **இது என் அன்பு வேண்டுகோள். எச்சரிக்கை வேண்டுகோள்**.

4) மற்ற பதினெண்சித்தர் பீடாதிபதிகள் போல் அல்லாமல் இன்று வாழும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய குருதேவர் ‘சிறு துரும்பும் பல் குத்த உதவும்’ என்ற குருபாரம்பரிய வாசகப்படி யார் யாருக்கு எப்படி யெப்படிப்பட்ட மனப் பக்குவமும்,

சிந்தைத் தெளிவும், கருத்துத் தரமும், பயிற்சி வலிவும், முயற்சிப் பொலிவும், ... இருக்கின்றன என்பதை ஆராய்ந்து அவரவர்களுக்கு ஏற்ற அருட்சத்திகளையும், சித்திகளையும், அருளுலகப் பணிகளையும், பொருளுலகக் கடமைகளையும் வழங்கி அவரவரைத் தம்மிடமிருந்து ஒவ்வோர் எல்லையில் நிறுத்தி, அங்கிருந்தே செயல்படும்படிக் கூறுகிறார்கள். கண்மூடித்தனமாக எல்லோரையும் தம்மோடு இணைத்துக் கொள்ளுவதில்லை. இதேபோல் எவரிடமோ அவரால் வாங்க முடியாத, தாங்க முடியாத பணிகளையோ, கடமைகளையோ ஒப்படைப்பதில்லை. இருந்தாலும், எதிர்பாராமல் அவருக்கே ஒருசில தோல்விகள் வந்து விட்டன.

எனவேதான், அவர் மீண்டும், மீண்டும் இன்று உருவாகியுள்ள அடியான்களையும், அடியார்களையும் அவரவரின் இரகசியம் காக்கும் வலிமையையும், எதையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தையும், அவர்மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையும், குருவாணையை மதித்து உடனே அதை முழுமையாகச் செயலாக்கும் சிந்தைத் தெளிவையும், குருதுரோகியாகவோ விரோதியாகவோ மாறிடாமல் இருக்கும் உணர்ச்சித் தராதரத்தையும் அவசர அவசியமாக விரிந்தும் விரைந்தும் பரிசோதிக்க ஆரம்பித்திருக்கிறார். இதற்காகப் பலரையும் தலைமைப்பீடத்திற்கு அவரவர் வசதி வாய்ப்புப்படி வரச் சொல்கிறார், தங்கச் சொல்கிறார். கடுமையான மின்னல்வேகச் சுற்றுப்பயணங்களில் பலரையும் தனிமையில் சந்திக்கின்றார்.

சீக்கிய மதகுரு ஆகிய ‘குருநானக்’ அவர்கள் தம்முடைய திருத்தொண்டர்களுக்கு வழங்கிய நுட்பதிட்ப உலகியல் கடந்த கொடுமையான சோதனைகளை விட; கடுமையும், கொடுமையும் மிகுந்த சோதனைகளை வழங்கியே தலைமையான வாரிசுகளை, பதிலிகளைத் தேர்ந்தெடுக்கின்றார்; பக்குவம் இல்லாதவர்களுக்கோ, விருப்பம்

இல்லாதவர்களுக்கோ, நம்பிக்கை இல்லாதவர்களுக்கோ இச் சோதனையில் இடமில்லை, இடமில்லை, இடமில்லை, இடமேயில்லை.

எனவே, குருதேவர் நிகழ்த்துகின்ற சோதனை எல்லோருக்கும் உரியதல்ல. அதாவது, **குருதேவரால் சோதிக்கப் படுகிறவர்கள் உலகியல் கடந்து அருளுலகில் மிகப்பெரிய உயரிய சிறந்த நிலைகளை அடையப் போகிறார்கள் என்பதே உண்மை**. அப்படிப் பட்டவர்களை வைத்துக் கொண்டுதான் தமிழின விடுதலை இயக்கம், தமிழ்மொழி விடுதலை இயக்கம், தமிழ்ப் பண்பாட்டு விடுதலை இயக்கம், தமிழர் மதமான இந்துமத விடுதலை இயக்கம் முதலியவைகளை வளர்த்து உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு இயக்கம், உலக இனங்களின் விடுதலை இயக்கம், உலக மொழிகளின் விடுதலை இயக்கம், ... முதலியவைகளை எல்லாம் இயக்கிடும் மாபெரும் சமுதாய மறுமலர்ச்சி இயக்கங்களையும், அரசியல் சீர்திருத்த இயக்கங்களையும் புதுமை நோக்கில் புரட்சிப் போக்கில் செயலாக்க ஆரம்பித்திட்டார்.

இவற்றை யெல்லாம் நம்மவர்கள் புரிந்தும் புரியவைத்தும்; இந்த அஞ்சலை எண்ணற்ற பேறு நகலெடுத்துப் பலருக்கும் வழங்கியும்; நம்மவர்கள் செல்லுகின்ற ஒவ்வொரு இடங்களிலும், சந்திக்கும் ஒவ்வொருவரிடத்திலும் இந்த அஞ்சலைப் படித்துக் காட்டி எல்லோருடைய எழுத்திலும், பேச்சிலும் இந்த அஞ்சலின் கருத்தோட்டத்தை இடம் பெறச் செய்தும் செயல்பட்டிட வேண்டும் நம்மவர்கள். அப்பொழுதுதான் கிராமங்கள் தோறும் பல இல்லங்களிலும், எண்ணற்ற உள்ளங்களிலும், நமது இ.ம.இ.யும், அ.வி.தி.யும் முளைவிட்டுச் செழித்து வளர்ந்திடும். அதனால், நமது இயக்கக் கிளைகளும், அ.வி.தி. அருட்கோட்டங்களும் இல்லாத ஊரே இல்லை என்ற நிலையும் உருவாகிடும். எங்கு பார்த்தாலும் நமது மெய்ஞ்ஞானக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும்.

அப்பொழுதுதான் யாராலும் அசைக்க முடியாத மொழிப்பற்றும், இன ஒற்றுமையும், இனக் கட்டுப்பாடும், பண்பாட்டுப் பிடிப்பும், மத நம்பிக்கையும் போர் ஆயுதங்களாக, போராட்டச் சத்திகளாக, பாதுகாப்பு அரண்களாக உருவாக்கப் பட்டிடும் அல்லது உருவாகிடும். எனவே, இந்த வேம்படிதாளத் தருகுல மண்டலப் பூசை (வாரபூசை) விழாவில் இந்த அஞ்சலேயே வாழ்த்துச் செய்தி அஞ்சலாக ஏற்றிடுங்கள். இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க வாழ்த்து மடல், பாராட்டுத் திருவோலை, குருவுளக் கருத்து அஞ்சல்.

இதனைத் தருகுலத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு முன்னாலே கையகலப் புத்தகமாக அச்சிட்டு வெளியிடுங்கள். முடிந்தால் அச்சிட்டு வெளியிடுங்கள். முயன்றால் அச்சிட்டு வெளியிடலாம்.

[5, 6, 7 *இந்த மூன்று பத்திகளும் அப்போதைய பயணத் திட்டம் பற்றிய செய்திகள் என்பதால் இங்கே தரப்படவில்லை.*]

**இவ்வஞ்சலுக்கு குருதேவரின் ஒப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.**

**தலைமைப் பணியாளர்களுள் ஒருவரான**
**பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம் இரா.சீனிவாசன்,**
**26/11/87.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

தலைமைப்பீடம்,
சென்னை-11,
4-12-87.

# சேலம் மாவட்டத்தார்க்குச் செயல்விளக்கத் திருவோலை

# தருகுல ஓராண்டு நிறைவு விழாப் பரிந்துரைகள்

1) அண்மையில் தருகுலத்தில் வாரப்பூசையில் மண்டல நிறைவுத் திருநாள் 26.11.87இல் கொண்டாடப்பட்டது பற்றிய செய்தித் தொகுப்பினைப் பலரின் வாயிலாகவும் அறிந்தோம். பதினெண்சித்தர் பீடமாகவும், மடமாகவும், அருளாட்சி நாயகமாகவும் இருந்து உருவ, அருவ, அருவுருவ நிலைகளின் வாயிலாகவும், ஞானக்காட்சி வாயிலாகவும் உணர்ந்தோம், அறிந்தோம், தெரிந்தோம். மிக்க மகிழ்ச்சி. நன்றி! வாழ்த்து! பாராட்டு!

2) தருகுலம் என்பது இம் மண்ணுலகத்துக்கே ஒன்றே ஒன்றுதான். அதுவும் பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்து அண்டபேரண்டங்கள் அனைத்தையும் இம்மண்ணுலகத்தோடு இணைப்பதற்காக உருவாக்கப்பட்ட தருகுலமே இது. ஆனால், இவ்வளவு அரிய, பெரிய, சீரிய, கூரிய தருகுலம் எங்கோ ஒரு மூலையிலுள்ள சின்ன பட்டிக்காட்டில் ஒரு வீட்டுமனை நிலத்தில் (ஏறத்தாழ அரை கிரவுண்டு) கலிகாலத்தின் விதிப்பயனால் உடல் ஊனமுள்ள ஒரு தனிமனிதனின் (அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணி) பொறுப்பாலும் விருப்பாலும்; மூன்று இளைஞர்களின் உதவியாலும் (கவி இல.க.கணேசன், இரா.வெங்கடேசன், சீ.பத்தவச்சலம்) உருவாக நேரிட்டு விட்டது. அதனாலோ என்னவோ தெரியவில்லை; அந்த வட்டாரத்தார்களும்

அந்த மாவட்டத்தார்களும் அதனுடைய அருமை பெருமைகளையும், அரிய பயன்களையும் தெரிய முடியாமல் போய்விட்டார்கள். இது அந்த வட்டாரத்தார்க்கே பெரிய இழப்பாகும். அருளுலகத்தார்க்குப் பெரிய சோதனையாகும். உடனடியாக இம் மாவட்டத்தார் அனைவரும் உணர்ந்தும் உணர்த்தியும், புரிந்தும் புரியவைத்தும், திருந்திச் செயல்பட்டேயாக வேண்டும். இல்லையேல், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி பல புரட்சிகள் செய்தது போல், இன்னும் சில இடங்களைத் தேர்ந்தெடுத்து இத் தருகுலத்தைப் பல கூறுபோட்டுப் பிரித்து அமைக்க நேரிட்டு விடும். அதனால், சேலம் மாவட்டத்துக்குரிய கிடைத்தற்கரிய முதன்மையும், பயன்களும் நலிய, மெலிய, பெருமளவில் குறைய நேரிட்டு விடும். அதனால், இன்று சேலம் மாவட்டத்தில் உள்ள அருளுலக வெற்றிகளும், வெற்றியாளர்களும் கணிசமான அளவு தேக்க மயக்கங்களை அடைந்திட நேரிடும்.

3) எனவே, சேலம் மாவட்டத்தார்கள் அனைவரும் சிந்தித்துப் புதிய புதிய முயற்சிகளை, புதிய புதிய முறைகளில் புதுவெள்ளம் போல் தங்கு தடையின்றி மேற்கொண்டு தங்களுக்குள் மிகமிக வளமான வலிமையான ஒற்றுமையினையும், ஒருமைப்பாட்டினையும் உருவாக்கிடல் வேண்டும். அதனால் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் பண்பும்; அனைவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து இணைந்து செயல்படக் கூடிய நாகரீகமும் விளைந்திடும். அப்படிப்பட்ட ஓர் ஒப்புயர்வற்ற கற்பனைச் சமுதாயம் (Utopian) உருவாக்கியே தீர வேண்டும்.

ஏனெனில், பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நமது தாயகத்து மக்களிடையே <u>பெரும்பான்மையினருக்குத்</u> தன்னம்பிக்கை உணர்வோ, தன்மான உணர்வோ, மொழிப்பற்றுணர்வோ, மொழியுரிமை உணர்வோ, இனப்பற்றுணர்வோ, இனஒற்றுமை உணர்வோ, இன ஒருமைப்பாட்டு உணர்வோ, இன உரிமையுணர்வோ, விடுதலையுணர்வோ, தாயகப்

பற்றுணர்வோ, தாயக உரிமையுணர்வோ, தாயகப் பண்பாட்டுப் பாரம்பரிய உணர்வோ, தாயக வரலாற்றுப் பெருமித உணர்வோ, தாயக இலக்கியப் பூரிப்புணர்வோ, ... இல்லை என்ற முடிவுக்கே எவரும் வரக்கூடிய நிலைதான் இருந்து வருகின்றது. இப்பேருண்மையினைப் பல நூற்றுண்டுகளாக **உலகாண்ட தனித்தன்மை கொண்ட தமிழினம் அன்னியர்களையே (வேற்று இனத்தவர்; வேற்று நாட்டவர்; வேற்று மொழியினர்) தங்களுக்குத் தலைவர்களாக, ஆச்சாரியார்களாக, வழிகாட்டிகளாக, வழித்துணைகளாக, ... ஏற்றுப் போற்றி வருவதன் மூலம் அறியலாம்**.

எனவேதான், எத்தனை யெத்தனையோ தத்துவ மேதைகள், சிந்தனைச் சிற்பிகள், பேரறிஞர்கள், மகாகவிகள், கலை விற்பன்னர்கள், சீர்திருத்தச் செயல்வீரர்கள், மொழியுணர்வு மிக்க அருளாளர்கள், இன உணர்வு மிக்க வித்தகர்கள், ... தோன்றித் தோன்றிச் செயல்பட்டும் கூட நம் தமிழினத்தவர்களின் அடிமைச் சிந்தையை மாற்ற முடியவில்லை; கூலி மனப்பான்மையைப் போக்க முடியவில்லை; ஒற்றுமையின்மையைத் திருத்த முடியவில்லை; தன்னம்பிக்கை உணர்வு, தன்மான உணர்வு, மொழிப்பற்றுணர்வு, மொழியுரிமை உணர்வு, இன உரிமையுணர்வு, இனப்பற்றுணர்வு, இன ஒற்றுமையுணர்வு, இன ஒருமைப்பாட்டு உணர்வு, விடுதலையுணர்வு, தாயகப் பற்றுணர்வு, தாயக உரிமையுணர்வு, தாயகப் பண்பாட்டுப் பாரம்பரிய உணர்வு, தாயக வரலாற்றுப் பெருமித உணர்வு, தாயக இலக்கியப் பூரிப்புணர்வு, ... முதலிய உணர்வுகளை விழிச்சியோ, எழிச்சியோ, செழிச்சியோ அடையச் செய்ய முடியவில்லை.

4) இவற்றையெல்லாம் ஆழ நினைத்தும், நீளச் சிந்தித்தும் தொலைநோக்குப் பார்வையோடு உருவாக்கப்பட்ட செயல்திட்டங்களை உடையதுதான் நமது இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அதன் கீழுள்ள நாற்பத்தெட்டு வகையான நிறுவனங்களும். இவற்றைச்

செயல்படுத்த வேண்டிய அனைத்து வகையான பயிற்சிகளையும், பொருளுலகச் சத்திகளையும், அருளுலகச் சித்திகளையும் பெற்றுள்ளவரே யாம். மேலும், எம்மை அனைத்து வகையான தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும், அருவ உருவ அருவுருவங்களும், தேவர்களும், தேவியர்களும், தேவதைகளும், பிண்டங்களும், அண்டங்களும், பேரண்டங்களும், அண்ட பேரண்டங்களும் (**பிண்டங்கள் = விண்ணுலக நாள், கோள், மீன்களில் முழுமையான வளர்ச்சி அடையாதவை**), கணங்களும், முனிவர்களும், இருடிகளும், தூதுவர்களும், குமாரர்களும், ... முழுமையாக அருளாட்சி நாயகமாகவே ஏற்றுப் போற்றி எம்மைச் செயலாக்கி வருகின்றார்கள். <u>எனவே, யாம் குறிப்பாகவும், இலைமறை காயாகவும், பட்டும் படாமலும், தொட்டும் தொடாமலும் கூறக்கூடிய அனைத்தையும் நம்மவர்கள் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டிடல் வேண்டும்! செயல்பட்டிடல் வேண்டும்! செயல்பட்டிடல் வேண்டும்!</u> இல்லாவிட்டால் நம் காலத்தில் நிகழ வேண்டிய எண்ணற்ற செயல்கள் கண்ணற்றவரின் தடுமாற்றச் செயல்களாவது போல ஆகிவிடும்.

[*5, 6, 7, 8 ஆகிய பத்திகள் அப்போதைய பயணத் திட்டம் தொடர்பான செய்திகள் என்பதால் இங்கே தரப்படவில்லை.*]

அன்பு

**குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**

4/12/87.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>குருபாரம்பரிய மாணுக்க இலக்கண விதிகள்</u>

“.. .. .. கடுமையான சட்டதிட்டக் கட்டுப்பாட்டை ஏற்று நடக்க முடியாதவர்களால் அருட்போர் முறைகளையும், போருக்குரிய வீரக்கலைகளையும் (The Divine Warfare and Martial Arts) கற்றுக் கொடுக்கக் கூடிய ஆசிரியராகச் செயல்பட முடியாது. அதாவது (a) மன அடக்கம், (b) நாவடக்கம், (c) மற்ற புலனடக்கம், (d) சபையறிந்து பேசுதல், (e) இரகசியம் காத்தல், (f) எல்லோரிடமும் ஒரே மாதிரியாகக் கலந்துரையாடாமல் இருத்தல், (g) சாதாரண மனிதர்களோடும், சாதாரண நிகழ்ச்சிகளிலும் அதிகம் கலக்காமல் சற்று விலகியே தலைமைப்பண்போடு வாழுதல், (h) எப்போதும் எவரிடத்தும் எதற்காகவும் அதிகாரமே செய்யாமல் உரத்த குரலில் பேசாமல் பிறருக்கு சேவை செய்யும் பணிவோடும், கனிவோடும் அடங்கி ஒடுங்கி வாழுதல், (i) வருபவர்களின் தரமும், திரமும் அறிந்து ஏற்ற கருத்துக்களை உரிய அளவு மட்டுமே வழங்கல், ... முதலிய **<u>குருபாரம்பரிய மாணுக்க இலக்கண விதிகளின்படி</u>** அமைதியாகவும், நிதானமாகவும், அடக்க ஒடுக்கமாகவும்; குருதேவரிடம் உண்மையுள்ளவராகவும், உண்மையே பேசுபவராகவும், எதற்கும் குருவுளத்தைத் தெரிந்து குருவாணைப்படியே செயல்படுபவராகவும் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.. .. ..”

*//அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு 12-11-1987இல் குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சலில் இருந்த கருத்து.//*

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குருபாரம்பரிய வாசகம்

**“.. .. .. கல்லேயும், புல்லேயும் கடவுளாக்கும் போது, கழுதைக் காலுடையானேயும், ஆந்தைக் கண்ணுடையானேயும், பேய்த் தோற்றமுடையவனேயும், பிசாசு சிரிப்புடையானேயும், கெட்ட தேவதைகளின் தொடர்புடையானேயும், மந்த புத்தியானேயும், மந்திரவாதியானேயும் ஏன் நல்ல அருளாளனுக மாற்ற முடியாது? அருகம்புல் ஆலாகப் பயன்படும்; ஆல் அருகம்புல்லாகப் பயன்படும். தருப்பைப்புல் தாருகா வனமாகப் பயன்படும்; தாருகாவனம் தருப்பைப் புல்லாகப் பயன்படுத்தப்படும். முற்பிறவிகளே மறுபிறவிகளாக்கப்படும்.... புரிந்தால், புரிந்து; நம்பினுல், நம்பிக் குருவழிச் செயல்படுக!.. .. ..”**

**ஓம் திருச்சிற்றம்பலம்**
**-அன்பே சிவமயம்-**

**அன்பு**
**அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை,**
**குவலய குருபீடம், குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**

*//22-12-1987இல் சித்தரடியார் திரு பெரி. முத்தையாவுக்கு குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சலில் இருந்த குருபாரம்பரிய வாசகம்.//*

**//இதன் மூலநகல்: ஒரிசா சித்தரடியான் திரு மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

**"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**

**- குருபாரம்பரிய வாசகம்.**








தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

நமது இயக்கக் கிளைகளும்,
அ.வி.தி. அருட்கோட்டங்களும் இல்லாத
ஊரே இல்லை என்ற நிலையும் உருவாகி எங்கு பார்த்தாலும் நமது
மெய்ஞ்ஞானக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com